## மலைப் பிரசங்கம்

## பாடம் 5

### மத்தேயு 6: 1-34

### கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 17

### ஆவிக்குரிய ஒழுக்கங்களும் செங்குத்தானவற்றின் மதிப்பும்

**நோக்கம்:** தேவனோடு உறவு கொள்வதற்கு, இயேசு தன்னுடைய சீடர்களுக்கு கற்றுக் கொடுத்த ஒழுக்கங்களை புரிந்து கொள்ளுதல்.

இயேசு தன்னுடைய சீடர்கள் பாக்கியத்திற்குரிய சிந்தைகளை தங்கள் இருதயங்களிலே வைத்து, அதனை தங்கள் அன்றாட வாழ்க்கையின் உறவு முறைகளில் பயன்படுத்தும்படியாக கற்று கொடுத்திருக்கிறார். மத்தேயு 6 வது அதிகாரத்தில், மற்றொரு கோணத்தில், தேவனோடு கூட உள்ள உறவினை பார்க்கும்படியாக கூறுகின்றார். குறிப்பட்ட ஆவிக்குரிய அல்லது செங்குத்தான ஒழுக்க முறைமைகளை பின்பற்றி, தாங்கள் எடுத்துக் கொண்ட தீர்மானத்தின்படி சீடர்களாக வாழ்வதற்குரிய தகுதியை காத்து கொள்ள வேண்டும்.

**தர்மஞ் செய்யும்போது பின்பற்ற வேண்டிய ஆவிக்குரிய ஒழுக்கமுறைமைகள்.**

*மனுஷர் காண வேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை. ஆகையால் நீ தர்மஞ் செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ தர்மஞ் செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக் கடவது. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய் பதிலளிப்பார்.* *மத்தேயு 6:1-4*



தன்னுடைய செயலை செய்ய விரும்புகிறவர்களிடத்தில் இயேசுவுக்கு தேவையான முதலாவது ஆவிக்குரிய ஒழுக்கம் - பூமிக்கு உப்பாகவும் உலகத்திற்கு ஒளியாகவும் - கண்காணியாய் இருப்பவர்களுக்கு தேவையான ஒழுக்கம். வேதாகமத்தின் அடிப்படையில் கண்காணியாய் இருப்பவர்கள் புரிந்து கொள்ளவேண்டியது, நமக்கு இருப்பவை அனைத்தும் (ஆரோக்கியம், திறமைகள், சொத்துக்கள், செல்வங்கள், குடும்ப உறவுகள், இன்னும் பல) தேவனுக்குரியவைகள். நாம் அவைகளை கண்காணிக்கும் மேலாளர்கள் மாத்திரமே. கண்காணிப்பின் மாதிரிகள் - நிர்வாகம்செய்தல் - தொண்டு மனப்பான்மையுடன் அந்தரங்கத்தில் செய்யப்படுகின்ற தர்மத்திற்கே இயேசு பலன் அளிக்கிறார் - படுக்கை கோடாக மக்களை தன் வசப்படுத்துகின்றதைக் காட்டிலும் செங்குத்து கோடாக தேவனை நோக்கி பிரதிபலிக்க வேண்டும். இயேசுவின் நாட்களில் வாழ்ந்த மதத் தலைவர்கள் தர்மம் செய்வது, மாய்மாலமானதாக காணப்பட்டது. மற்றவர்கள் பார்க்கும்படியாக தர்மம் செய்கிறவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தாயிற்று என்று இயேசு சொல்லுகிறார்: அது, மனிதர்களிடமிருந்து வந்த புகழ்ச்சியான வார்த்தைகள். உண்மையான நீதி என்பது மனிதர்களை தன் வயப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்படுவது அல்ல, அந்தரங்கத்தில் செய்யப்படுபவைகளுக்கு தேவன் வெளியரங்கமாய் பதிலளிக்கிறார்.

1. மத்தேயு 6: 4 இல் அந்தரங்கமாய் கொடுப்பவர்களுக்கு தேவன் பலனளிப்பார் என்று இயேசு சொல்லுகிறார்.

2. சரியா? தவறா?: பரிசேயர்கள், தாங்கள் எவ்வளவு உதார மனமுடையவர்கள் என்று மக்கள் பார்க்க வேண்டும் என்று விரும்பினார்கள்.

3. சரியா? தவறா?: உங்கள் வெளிச்சம் அவர்களுக்கு முன்பாக பிரகாசிக்க கடவது என்று இயேசு மத்தேயு 5:16 இல் கூறியதற்கு பரிசேயர்கள் ஒரு சிறந்த எடுத்துகாட்டு.
   சரியானவற்றை கோடிட்டு காட்டவும்

4. ஏன் இயேசு, தன்னுடைய சீடர்களிடம் அவர்கள் வெளிச்சம் மனிதர் முன்பாக பிரகாசிக்க வேண்டும் என்று கூறிவிட்டு, பரிசேயர்கள் பிறர் பார்க்கும்படியாக சட்டதிட்டங்களை கடைபிடிப்பதை கண்டிக்கிறார்?
   அ) ஏனென்றால், தாங்கள் புகழப்பட வேண்டும் என்பதே பரிசேயர்களின் நோக்கமாக இருந்தது.
   ஆ) ஏனென்றால் பரிசேயர்களுக்கு கிடைக்கின்ற மரியாதையைப் பார்த்து இயேசு பொறாமைப்பட்டார்.
   இ) ஏனென்றால் பரிசேயர்கள் தங்கள் சுய நீதியின்படி நடந்தார்கள். சீடர்கள் தங்களுக்குள்ளாக இருக்கும் தேவனின் ஆவியைக் கொண்டு நடந்தார்கள்.
   ஈ) ஏனென்றால் இயேசு இரண்டு விதமான தரங்கள் வைத்திருந்தார்.

5. ஏன் இயேசு தன்னுடைய சீடர்களிடம் அந்தரங்கமாய் தர்மம் செய்யும்படிகூறினார்?
   அ) தாங்கள் தர்மம் செய்வதின் நோக்கம் பரிசுத்தமானதாக இருக்க வேண்டும் என்பதற்காக
   ஆ) தாங்கள் எவ்வளவு குறைவாக கொடுக்க முடியும் என்பதைக் குறித்து அவர்கள் மனதில் குழப்பமடையாதபடி
   இ) ஏனென்றால், தாங்கள் எவ்வளவு உதாரத்துவமாய் கொடுக்கிறார்கள் என்று அவருடைய கவனம் அவர்களை நோக்கி இழுக்கப்படுவதை இயேசு விரும்பவில்லை.
   ஈ) ஏனென்றால் தேவன் அவர்களுக்கு பதிலளிக்கும்படியாக



6. சரியா? தவறா?: இன்று, பரிசேயர்களைப் போல தாங்கள் செய்கின்ற நல்ல காரியங்களினால் பிறர் கவனத்தை கவர வேண்டும் என்ற பிரச்சனை ஒருவரிடமும் இல்லை.

நீங்கள் எப்போதாவது தேவனுக்கு கொடுப்பதை பிறர் பார்த்து பாராட்ட வேண்டும் என்று இரகசியமாக விரும்பியதுண்டா? அப்படியென்றால், அதன் பின்பு நீங்கள் எவ்விதமான உணர்வடைந்தீர்கள்?
..........................................................................................................
..........................................................................................................

## ஜெபத்திற்கான ஆவிக்குரிய ஒழுக்கம்

### கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 18

*அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப் போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். நீங்கள் ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது:*

*பரமண்டலங்களிலிருக்கிற எங்கள்பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.*
*உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே*
*செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.*
*எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.*
*எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்கள*
*எங்களுக்கு மன்னியும்.*
*எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்*
*கொள்ளும், ராஜ்யமும் வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும்*
*உம்முடையவைகளே, ஆமென், என்பதே.*

*மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.*

*மத்தேயு 6:5-15*

இது எப்போதும் “கர்த்தருடைய ஜெபம்” என்று அழைக்கப்படுகிறது. ஆனால் இது “சீடர்களுடைய ஜெபம்” என்று அழைக்கப்பட வேண்டும். ஏனென்றால் இயேசு ஒருபோதும் இவ்விதமாக ஜெபிக்கவில்லை. இயேசு, நீங்கள் இவ்விதமாக ஜெபிக்க வேண்டும் என்றுதான் கூறுகின்றார். தேவன் ஒருவர் தவிர மற்ற எவரும் மனதில் ஆழமாக பதிய முடியாத, அந்த இடத்தில் கதவுகளைப் பூட்டி தனிமையாக, ஜெபிக்கும்படியாக கூறுகின்றார்.

இந்த மாதிரி ஜெபத்தில் தேவ சித்தத்திற்குட்பட்ட விண்ணப்பங்கள், தேவனுடைய அக்கறையை முதன்மையாக கொண்ட ஜெப விண்ணப்பங்கள் உள்ளது. இதில் தனிப்பட்ட விண்ணப்பங்கள், சீடர்களின் தேவைகளைக் குறித்த ஜெப வேண்டுதல்களும் உண்டு. இது முதலாவது தேவன் என்ற வேதாகமத்தின் செய்தியை சீராக ஒத்து வருகின்றது. இதை நாம் செய்யும்போது, கடைக்கு செல்லும்போது கொண்டு செல்கின்ற பொருட்களின் பட்டியலைப் போன்று ஒரு பட்டியலை தேவனிடம் கொண்டு சென்று அவர் நமக்கு என்ன செய்வார் என்றில்லாமல், நாம் அவருக்காக என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறவர்களாக இருப்போம். நமது சித்தத்தை அவருடைய சித்தத்தோடு இணைக்கும்போது, நமது தனிப்பட்ட விண்ணப்பங்களுக்கு அவர் பதில் கொடுக்கிறார்.

1. மத்தேயு 6:8 வது வசனம், உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.

2. சரியா? தவறா?: அந்தரங்கமாய் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கூறியபோது, அவர் நாம் ஒருபோதும் பொதுவான வழிபாட்டு ஆராதனைகளில் ஜெபம் பண்ணக் கூடாது என்று கூறுகின்றார்.

3. சரியா? தவறா?: நாம் எவ்விதமாக ஜெபம் பண்ண வேண்டும் என்பதற்கு மாதிரியாக இயேசு இந்த ஜெபத்தை கற்று கொடுத்தார்.

4. சரியா? தவறா?:எந்த விதமான ஜெபத்திலும், நாம் தேவனோடுபேசுகிறோமேயன்றி சுற்றிலும் இருக்கிற மக்களை வயப்படுத்துவதற்காக அல்ல என்பது நாம் நினைவில் வைக்க வேண்டிய முக்கியமான காரியமாகும்.

5. சரியா? தவறா?: தேவனைப் "பிதாவே"என்று கூப்பிடுவது இயேசுவின் சீடர்களுக்கு ஒரு புதிய அடிப்படை கருத்தாகும்.

6. கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் "தேவனை முதன்மையாக கொண்ட" தேவ சித்தத்திற்குட்பட்ட வேண்டுதல்களை கோடிட்டு காட்டவும். சீடர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கான வேண்டுதல்களுக்கு **x** அடையாளமிட்டுகாட்டவும்.
   உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக
   எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்
   எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.
   உமது சித்தம் செய்யப்படுவதாக
   தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்
   உமது ராஜ்ஜியம் வருவதாக
   எங்களை சோதனைக்குட்பட பண்ணாதேயும்.

7. தேவன் நமது"பிதா"என்பதை புரிந்து கொள்ளவேண்டியதின்முக்கியத்துவம் என்ன? சரியானவற்றை கோடிட்டு காட்டவும்
   அ) அவர் நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட தேவன் என்பதைக் காட்டுகிறது.
   ஆ) அவர் நமது வாழ்வில் அக்கறையுள்ளவர் என்பதைக் காட்டுகிறது.
   இ) நாம் அவரை ஒரு போதகர் மூலமாகத்தான் நெருங்க வேண்டுவதில்லை என்பதைக் காட்டுகிறது.
   ஈ) பழைய ஏற்பாட்டில் இவ்விதமாக எந்த இடத்திலும் காணப்படவில்லை.



8. தேவன் "பரமண்டலங்களில் இருக்கிறவர்" என்பதை புரிந்து கொள்ள வேண்டியதின் முக்கியத்துவம் என்ன?
   அ) அவர் கடவுள் தன்மையானவர் என்பதை காட்டுகிறது.
   ஆ) அவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்பதைக் காட்டுகிறது.
   இ) ஒரு போதகர் மூலமாகத்தான் நாம் அவரை சென்றடைய வேண்டும் என்று பொருள்படும்.
   ஈ) நமது தேவன் மிகவும் உயர்ந்தவராக, எல்லாவற்றையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார் என்று பொருள்படும்.
   கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளில் சரியானவற்றை கோடிட்டு காட்டவும்.

9. "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்று ஜெபத்தில் நாம் சொல்லும்போது ...
   அ) சொல்லுவதற்கு தேவனுடைய நாமம் மிகவும் பரிசுத்தமானது
   ஆ) மக்கள் அவருடைய நாமத்தை போற்றி புகழும்படி நாம் வாழவிரும்புகிறோம்.
   இ) தேவனை எவ்விதமாக சொல்லி ஜெபம் செய்ய வேண்டும் என்பதற்காக

10. "உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக" என்று ஜெபத்தில் நாம் சொல்லும்போது .........
   அ) இயேசு திரும்பவும் வருவதற்கு நாம் ஆயத்தமாக இருக்கிறோம்.
   ஆ) உலகப்பிரகாரமான அரசாங்கத்தை தேவன் அப்புறப்படுத்தும்படியாக
   இ) நம்முடைய சுய ராஜ்ஜியத்தில் அல்லாமல் அவருடைய இராஜ்ஜியத்தில் இருக்க விரும்புகிறோம்.

11. மத்தேயு 23:39 வாசிக்கவும். இந்த வசனத்தில் சீடர்களுடைய ஜெபத்தின் எந்த விண்ணப்பத்தை இயேசு மாதிரியாக எடுத்துள்ளார்?
   அ) எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.
   ஆ) உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக.
   இ) தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்.

12. நமது அனுதின ஆகாரத்தை நாம் கேட்கும்படியாக இயேசு கூறியதின் அர்த்தம் .....
   அ) ஆகாரம் என்பது நமது அனைத்து தேவைகளையும் குறிக்கிறது.
   ஆ) ஆகாரத்தோடு நாம் திருப்தியடைந்து விட வேண்டும். வேறு எதையும் கேட்கக் கூடாது.
   இ) ஆவிக்குரிய மன்னா என்பது உவமானமாக ஆகாரம் என்று கூறப்பட்டுள்ளது.

13. ஆவிக்குரிய விண்ணப்பங்களின் பட்டியலில் இயேசு ஏன் மன்னிப்பை முதலாவதாக குறிப்பட்டுள்ளார்?
   அ) ஏனென்றால் அது தான் நமது முக்கியமான தேவையாகும்.
   ஆ) ஏனென்றால் அவருடைய சீடர்கள் குறிப்பாக தங்களுடைய பாவங்களைக் குறித்து குற்றவுணர்வுடையவர்களாய் இருந்தார்கள்.
   இ) ஏனென்றால் தேவன் மன்னிக்க தயங்குகிறவராகவும் நமது தேவைகளை குறித்து அவரிடம் பேசி இணங்க வைக்க வேண்டியதாயிருந்தது.

14. சரியான விடைகளை கோடிடவும். தவறான விடைகளை **x** குறியிடவும். நாம் தினமும் இந்த காரியங்களை கேட்க வேண்டும் என்று இயேசு கூறுகிறார்.

| | | |
|---|---|---|
| பாதுகாப்பு | மன்னிப்பு | அப்பம் |
| வழிநடத்துதல் | பணம் | சமாதானம் |
| சௌக்கியம் | தீமையினின்று இரட்சிப்பு | |

15. தேவன் நம்மை சோதிக்கவில்லையென்றால் (யாக்கோபு 1:13), ஏன் இயேசுதன்னுடைய சீடர்களிடம் சோதனைக்குட்படாதபடிக்கு தேவனிடம் கேட்கும்படியாக கூற வேண்டும்.
   அ) ஏனென்றால், தேவன் நம்மை சோதிக்கவில்லை என்றாலும், சோதிக்கப்படும் போது நாம் என்ன செய்கிறோம் என்பதை அவர் பார்க்க விரும்புகிறார்.
   ஆ) ஏனென்றால் தேவன் திரும்பவுமாக நம்மை மன்னிக்க விரும்பவில்லை.
   இ) நாம் பெலவீனராயிருக்கிறபடியாலும், நமதுமனித சுபாவம் பாவம் செய்ய சாதகமாயிருப்பதாலும்

16. தீமையினின்று எங்களை இரட்சித்து கொள்ளும் என்று நாம் ஜெபிக்கும்போது நாம் உண்மையாகவே தேவனிடம் கேட்பது
   அ) இந்த உலகத்தினின்று எடுத்து கொள்ளும்
   ஆ) சாத்தானை எதிர்த்து நிற்க அவருடைய பலத்தை பயன்படுத்த
   இ) சோதனை மற்றும் பாவத்திலிருந்து நம்மை தற்காத்து கொள்ளும் தன்மையை பெற்று கொள்ள

17. சரியா? தவறா?: “சீடர்களுடைய ஜெபம்” தேவன் முதலாவது என்ற அறிவிப்புடன் முடிவடைகிறது.

தங்களுடைய ஜெபம் தேவனை முதன்மையாக கொண்டுள்ளதா? : “சீடர்களுடைய ஜெபத்தில்” நீங்கள் அடிக்கடி கேட்கும் விண்ணப்பம் எது?
..........................................................................................................................
அந்த விண்ணப்பத்தைக் குறித்து இன்று சிறிது நேரம் செலவிடவும்.

## உபவாசித்தலின் ஒழுக்கம்

### கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 19

*நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப் போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும் பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப் பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.நீயோ உபவாசிக்கும் போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு.அப்பொழுது,அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.*

*மத்தேயு 6:16-18*

தர்மம் செய்வதும், ஜெபம் செய்வதும் பிறர் மனதில் நம்மைக் குறித்து ஆழமாக பதிய செய்யாமல், செங்குத்தாக தேவனுக்கு நேராக ஏறெடுக்கப்பட வேண்டும் என்பது போல உபவாசமும் இருக்க வேண்டும். மற்ற ஒழுக்கங்களைப் போலவே இதையும் தேவன் பார்த்து பலனளிக்கிறார்.

1. மத்தேயு 5:16, இயேசு தன்னுடைய சீடர்களிடம் உபவாசிக்கும்போது முகவாடலாய் இருக்க வேண்டாமென்று கூறுகின்றார். (தெரிந்தெடு:சுகவீனமாய், பரிசுத்தமாய், சந்தோஷமாய், முகவாடலாய்)

2. சரியா? தவறா?: “நீங்கள் உபவாசிக்கும்போது ........... இராதேயுங்கள்”; “நீயோ உபவாசிக்கும்போது .........” .



3. சரியா? தவறா?: தாங்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிக பக்தியுள்ளவர்கள் என்று காண்பிக்கும் பொருட்டு பரிசேயர்கள் தாங்கள் உபவாசிப்பதை மக்கள் கவனிக்க வேண்டும் என்று விரும்பினார்கள்.

4. சரியா? தவறா?: மத்தேயு 17:21 இன்படி உபவாசம், ஜெபத்திற்கு அதிக வல்லமையைக் கொடுக்கும்.

5. சரியா? தவறா?: ஆவிக்குரிய காரியங்களில் ஒருமுகப்படவும் தேவனை முதன்மையாக வைக்கவும் உபவாசம் உதவி செய்யும்.

6. நாம் உபவாசிக்கும்போது நமது முகங்கள் எவ்விதமாக இருக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்?
   அ) வருத்தமாகவும் கருத்தூன்றியதாகவும்
   ஆ) சோர்வாகவும் பசியால் வாடியதாகவும்
   இ) மற்றெல்லாரைக் காட்டிலும் பக்தி வினயமாகவும்
   ஈ) பிரகாசமாகவும் சந்தோஷமாகவும்

7. ஏன் இயேசு தன்னுடைய சீடர்கள் உபவாசிக்க வேண்டும் என்று கூறினார்?
   அ) தேவனின் உதவியைப் பெற்று கொள்ளவும் அவர் நம்மை கவனிக்கும்படி செய்யவும்.
   ஆ) சுய - ஒழுக்கத்தின் மாதிரியாக
   இ) தங்களுடைய கவனத்தை தேவன்மேல் ஒருமுகப்படுத்த
   ஈ) தேக சுகத்திற்காக

நீங்கள் எப்போதாவது தனிமையில் உபவாசித்திருக்கிறீர்களா? செங்குத்தாக தேவன் மேல் விசுவாசமுள்ளவர்களாக
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................

## ஒரு சீடனின் செங்குத்தான மதிப்புகள்

### கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 20

*பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்;இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்: பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்! இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.*

*மத்தேயு 6:19-24*

மலையடிவாரத்திற்கு வந்திருக்கிற மக்களுக்கு பலவிதமான போராட்டங்கள் இருப்பதற்கான ஒரு காரணம் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் தவறான காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்களாக காணப்படுகிறார்கள் என்று இயேசு தன்னுடைய சீடர்களுக்கு போதித்து கொண்டிருந்தார். சீடர்களில் தங்களுக்குள்ளாக சரியான சிந்தை கொண்டவர்கள் சரியானவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதினால் தான் அவர்கள் இந்த உலகத்தில் ஒரு உப்பாகவும் ஒளியாகவும் பிறரை தன்பால் ஈர்க்கிறவர்களாக திகழ்கிறார்கள். அவர்கள் அடிப்படையில் உலகப்பிரகாரமான பொக்கிஷங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், நித்தியத்திற்கடுத்த காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்களாக காணப்படுகிறார்கள்.

1. மத்தேயு 6:20 வது வசனத்தில் இயேசு தன்னுடைய சீடர்களிடம் பரலோகத்திலே தங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்கும்படி கூறினார்.
   (தெரிந்தெடு: வீடு, பரலோகம், வங்கி, ஆலயம்)

2. சரியா தவறா: நமது பொக்கிஷங்களுக்கும் நம் இருதயத்தின் நிலைக்கும் சம்பந்தம் இல்லை.

3. சரியா தவறா: நமக்கிருக்கும் மதிப்பும் நமது மனப்பான்மைகளும் நாம் ஒளி அல்லது இருள் ஆகியவற்றில் எதினால் நிரப்பப்பட்டிருக்கிறோம் என்பதை பிரதிபலிக்கும்.
   கீழே குறிப்பட்டவைகளில் சரியான பதிலை கோடிட்டு காட்டவும்.

4. சீடர்கள் உலகப்பிரகாரமான பொக்கிஷங்களை சேர்த்து வைப்பதில் தங்கள் ஆற்றலை செலவிட வேண்டாம் என்று இயேசு ஏன் கூறினார்?
   அ) ஏனெனில் பூலோகத்திலுள்ள பொருட்கள் முக்கியத்துவம வாய்ந்தவைகள் அல்ல.
   ஆ) ஏனெனில் பூலோகத்திலுள்ள பொருட்கள் படிப்படியாக குறைந்து போகும் அல்லது திருடப்பட்டு விடும்.
   இ) ஏனெனில் செல்வம் பாவத்தினாலானது.

5. ஒரு சீடன் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது என்று கூறியபோது, அவர் தேவன் தவிர மற்றொரு எஜமானாக எதை குறிப்பிட்டார்?
   அ) அந்தஸ்து
   ஆ) செல்வம்
   இ) வேலை
   ஈ) குடும்பம்

6. கீழே குறிப்பிட்ட பட்டியலில் எந்த காரியங்கள் இயேசுவுக்கு ஊழியம் செய்யாதபடி உங்களை தடுக்கிறது?

| | |
|---|---|
| கவலை | எதிர்கால திட்டங்கள் |
| அந்தஸ்து | குடும்ப உறவுகள் |
| கல்வி | உடைமைகள் |
| வேலையைக் குறித்த செயல்கள் | போதை பொருளுக்கு அடிமையாதல் |
| போதை போன்ற தீய பழக்கங்களுக்குஅடிமையாதல் | |
| செல்வம் தகுதி ஆகியவற்றை குறித்த பேராவல் | |



இயேசு உங்கள் எஜமானராக இருக்கும் வரை அவர் அனுமதிக்காத ஏதேனும் செயல் அல்லது எண்ணம் மேலே குறிப்பிட்ட பட்டியலில் இருக்குமென்றால் அதனை குறிப்பிடமுடியுமா?

..............................................................................................................

இவைகளில் ஒன்று தேவனுக்கும் உங்களுக்குமான தொடர்பிலிருந்து உங்களை திசை திருப்புமென்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

..............................................................................................................

## உப்பு மற்றும் ஒளியின் மதிப்புகள்

### கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 21

*ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப் படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப் படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். ஆகையால், நாளைக்காகக் கவலைப் படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காக கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.*

*மத்தேயு 6:25-34*

இந்த பகுதி கவலையைக் குறித்து துவங்கினாலும், உண்மையில் மதிப்பு அல்லது முக்கியத்துவம் என்பதை மையமாகக் கொண்டே போதிக்கிறது. இயேசுவின் சீடர்கள் ஒவ்வொருவரும்: "முக்கியத்துவ இலக்கு" உடையவர்களாய் அதின் மையத்தில் ஒரு வட்டம் தேவன் தங்கள் இருதயத்தை ஆளுகை செய்வதை குறிப்பதாக இருக்க வேண்டும். மையப்பகுதியை சுற்றிலும் உள்ள அனைத்தும் இராஜாதி இராஜா எதனை சரி என்று தெரிவிக்கிறாரோ அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதாக இருக்க வேண்டும். எவற்றைக் குறித்தெல்லாம் நாம் கவலைப்படும்படி ஈர்க்கப்படுகிறோமோ, அவையெல்லாம் நமது பரம பிதாவினால் நமக்கு கொடுக்கப்படும்.

1. மத்தேயு 6:33 வது வசனத்தில் முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடும்படி இயேசு கூறுகிறார்.

2. சரியா? தவறா?: இவைகளைக் குறித்து கவலைப்பட வேண்டாம் என்று இயேசு கூறுகின்ற காரியங்களை குறித்து நாம் கடினமாக முயற்சி செய்தால், அக்காரியங்கள் இல்லாமல் நம்மை அடக்கி கொள்ளலாம்.

3. சரியா? தவறா?: பறவைகளைப் போலவும் புல்லைப் போலவும் நாம் கவலையற்றவர்களாக இருக்கலாம் என்று இயேசு வாக்கு கொடுக்கிறார்.

4. கீழே கொடுக்கப்பட்ட பட்டியலில் நீங்கள் அதிகமாக கவலைப்படும்படியான காரியங்களை கோடிடவும்.

| | |
|---|---|
| உணவு | உடை |
| பணம் | தங்குமிடம் |
| பானம் | வேலை |
| உறவுகள் | பள்ளைகள் |
| கணவன்/மனைவி | எதிர்காலத் திட்டங்கள் |

5. மேற்குறிப்பிட்டவைகளில் எவைகள் தேவனுடைய வாக்குதத்தத்தில் அடங்கியுள்ளது?



மேற்குறிப்பிட்டவைகள் எல்லாம் எதனையும் ஒதுக்கி வைக்காமல் எல்லாவற்றையும் தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுவதற்காக உங்கள் வாழ்க்கையை முழுவதுமாக கொடுத்து வீட்டீர்களா?. ..........................................................................................

அப்படியில்லையென்றால், அவ்வாறு செய்ய உங்களை தடை செய்வது என்ன?
......................................................................................................................